## முதலமைச்சரின் 4 ஆண்டு நல்லாட்சியில்,

# இந்தியாவிலேயே 11,876 மருத்துவ கட்டமைப்பு கொண்ட ஒரே மாநிலம் தமிழ்நாடு!

## சட்டப் பேரவையில் மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரையில் பெருமிதம்!

**சென்னை, ஏப்.23 -**

**சட்டப் பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மானியக் கோரிக்கை பதிலுரையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 4 ஆண்டு நல்லாட்சியில் இந்தியாவிலேயே 11,876 மருத்துவக் கட்டமைப்பு செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு தான் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்**

**இதுகுறித்து சட்டப் பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரை வருமாறு:**

*தருக்கர்களின் கொட்டங்களுக்கு*
*தாழிவைத்த எரிமலை!*
*இனமானத் தமிழர்களுக்கு*
*இதயம் உருகும் பனிமலை!*
*ஈரோட்டுப் பகலவன்*
*தந்தை பெரியாரைப் போற்றுகிறேன்!*

*திராவிடப் பொன்னாட்டின் சிற்பி!*
*செந்தமிழ் நாடுகண்ட மேதை!*
*ஈரோடு பற்றவைத்த நெருப்பு!*
*இனமானம் கற்றுத்தந்த சிறப்பு!*

*பேரறிஞர் பெருந்தகை அண்ணாவை வணங்குகிறேன்!*
*ஆயிரம் யுகங்கள் வந்துபோகும்,*
*அருந்தமிழ்க் கலைஞர்போல் வருவதில்லை!*
*அண்டத்தில் ஆதவன்கள் கோடி உண்டு,*
*அறிவாலயச் சூரியன்போல் ஒளிர்வதில்லை!*
*அகிலத்தில் எத்தனையோ நீதியுண்டு,*
*அவையெல்லாம் நெஞ்சுக்கு நீதியாமோ?!*
*அடைகாக்கும் தாய்மடி மண்ணில் உண்டு,*
*ஆரூர் தலைவர்போல் அன்னை இல்லை!*
*முத்தமிழறிஞர் கலைஞர் துயிலும்,*
*திசைநோக்கி வணங்குகிறேன்!*

*மீசை முளைக்காத வயதில்,*
*கழகக்கொடி ஏந்தியவர்!*
*மிசா என்னும் கொடிய*
*நெருப்பாற்றில் நீந்தியவர்!*
*வியர்வைத் துளிகள் சிந்தி*
*வெற்றிச் சிகரம் ஏறியவர்!*
*பெரியார்-அண்ணா-கலைஞர்*
*மூவரும் சேர்ந்த ஒரு தத்துவமாய் மாறியவர்!*
*தேசங்கள் போற்றும் - திராவிட மாடல் நாயகர்!*
*தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்!*

*உதயநிதி! தமிழர்தம் இதயநிதி!*
*கழகத்தைத் தாங்கும் காலநதி!*
*கால்கொண்டு நடக்கும் கருணாநிதி - எனும்*
*புகழுக்குரிய - மேன்மைமிகு, மாண்பமை தமிழ்நாட்டின்*
*துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்*
*செயற்கரிய சாதனைகளைப் பாராட்டி, வாழ்த்தி,*
*எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்!*

**மருத்துவ கட்டமைப்பு**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் ஐந்தாம் முறையாக வழங்கப்பட்ட மைக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாட்டின் மருத்துவக்கட்டமைப்பு என்பது இந்தியாவில் 36 மாநிலங்கள் இருந்தாலும், அனைத்து மாநிலங்களையும் கடந்து மிகப்பெரிய அளவிலான மருத்துவக் கட்டமைப்பைப் பெற்றிருக்கிறது. 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், 37 மாவட்ட அரசு மருத்துவமனைகள், 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 22 இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவமனைகள், 15 மருத்துவக் கல்லூரி இணைப்புடன்கூடிய மருத்துவமனைகள், 3 பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 2 பன்னோக்கு மருத்துவமனைகள் என்று தமிழ்நாட்டில் மிகப்பெரிய மருத்துவக் கட்டமைப்பு இருக்கிறது. 11,876 மருத்துவக் கட்டமைப்புகளை உள்ளடக்கிய ஒரே மாநிலம் இந்தியாவில் தமிழ்நாடு என்பது மிகப்பெரிய அளவிலான சிறப்பு.

WHO என்று சொல்லப்படுகிற உலக சுகாதார மையம் ஆயிரம் பேருக்கு மருத்துவர்கள் விகிதாச்சாரத்தை அண்மையில் வெளியிட்டது. அமெரிக்காவைப் பொறுத்தவரை ஆயிரத்திற்கு 3.6, இங்கிலாந்தைப் பொறுத்தவரை ஆயிரத்திற்கு 3.3, கனடாவைப் பொறுத்தவரை ஆயிரத்திற்கு 2.8, இந்தியாவைப் பொறுத்தவரை ஆயிரத்திற்கு 1.2, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஆயிரத்திற்கு 4 என்கின்ற வகையில் மருத்துவர் கட்டமைப்பைப் பெற்றிருக்கிறது.

உலக அளவில் மிகப்பெரிய நாடுகளுக்கு சவால் விடுகிற அளவுக்கான மருத்துவர் கட்டமைப்பையும் தமிழ்நாடு பெற்றிருக்கிறது; மருத்துவக் கட்டமைப்பையும் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக, வணக்கத்திற்குரிய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அரசு மருத்துவமனைகளில் புறநோயாளிகளின் எண்ணிக்கை 56 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. ஒரு சதவிகிதம், இரண்டு சதவிகிதம் அல்ல, புற நோயாளிகளின் எண்ணிக்கை 56 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பு, இராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தினந்தோறும் வருகை தரக்கூடிய புறநோயாளிகளின் எண்ணிக்கை 8,000 முதல் 9,000 நபர்கள்தான். ஆனால், இன்றைக்கு 17,000 முதல் 18,000 நபர்கள் வருகிறார்கள். இப்படி ஒவ்வொரு மருத்துவமனையிலும், அது மதுரை இராஜாஜி மருத்துவமனையாக இருந்தாலும், திருச்சி கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவமனையாக இருந்தாலும், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும், சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாக இருந்தாலும், அதில் இரு மடங்கு, மும்மடங்கு என்கின்ற வகையில் புறநோயாளிகளின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் புற நோயாளிகளின் எண்ணிக்கை 56 சதவிகிதம் உயர்ந்திருப்பதன்மூலம், இனிமேல் ஒட்டுமொத்த தமிழர்களும் அரசு மருத்துவச் சேவையை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடிவெடுத்திருக்கிறார்கள் என்பது நமக்குப் புலனாகிறது. அதேபோல, உள்நோயாளிகளின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை, 43 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. உள்நோயாளிகளாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 43 சதவிகிதம் அதிகரித்திருக்கிறது.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, இன்றைக்கு மருத்துவக் கட்டமைப்பை மேம்படுத்திக் கொண்டிருக்கின்ற அந்த விதம் காரணமாக 34 கோடி ரூபாய் செலவிலான Robotic cancer equipment என்ற மருத்துவ உபகரணம், Flat Panel DSA, Double Balloon Endoscopy, Holmium Laser, Hipec, 3D Microscope போன்ற அதிநவீன மருத்துவ உபகரணங்கள் இன்றைக்கு தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் மக்கள் பயன்பாட்டிற்கு இருக்கின்றன. நான் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புவது என்னவென்றால், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட இந்த மருத்துவ உபகரணங்கள் இந்தியாவிலிருக்கிற 36 மாநில அரசு மருத்துவமனைகள் நடத்துகிற எந்த நிர்வாகத்திலும் இல்லை என்பது இன்றைக்கு மிகப்பெரிய அளவிலான மகிழ்ச்சி.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு சுமார் 99,668 அதிநவீன மருத்துவ உபகரணங்கள், CT Scan, MRI, digital X-Ray போன்ற பல்வேறு மருத்துவ உபகரணங்கள், 99,668 உபகரணங்களை புதிது புதிதாக வாங்கித் தரப்பட்டுள்ளன. அதற்காக செலவிட்டிருக்கிற தொகை 1,789 கோடியே 14 இலட்சம் ரூபாய். அவ்வாறு 1,789 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதலாக மருத்துவ உபகரணங்களை வாங்கித் தந்ததன் விளைவாகவே, இன்றைக்கு அரசு மருத்துவமனைகளில் 61 சதவிகிதம் அறுவை சிகிச்சைகள் உயர்ந்திருக்கின்றன. யாரும்கூட கேட்கக்கூடும். 56 சதவிகிதம் புறநோயாளிகள் உயர்ந்திருக்கிறார்கள்; 43 சதவிகிதம் உள்நோயாளிகள் உயர்ந்திருக்கிறார்கள்; 61 சதவிகிதம் அறுவை சிகிச்சைகள் உயர்ந்திருக்கின்றன என்றால், தமிழகத்தில் நோயின் தன்மை கூடியிருக்கிறதா என்று யாரும் கேட்கக்கூடும். இல்லை, ஒட்டுமொத்த பேரும் தமிழக அரசின் மருத்துவச் சேவையை நம்பத் தொடங்கி இருக்கிறார்கள். அரசு மருத்துவமனைகளை நம்பத் தொடங்கியிருக்கிறார்கள். அரசு மருத்துவர்களின் மிகச் சிறந்த சேவைகளை ஏற்றுக்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள். அதன் விளைவாக, கட்டமைப்பும் உயர்ந்திருக்கிறது. மருத்துவர் கட்டமைப்பும் உயர்ந்த காரணத்தினால் இந்த சதவிகித அளவு என்பது தொடர்ந்து உயர்ந்துகொண்டு வருகிறது.

## ரூ.1789.14 கோடி செலவில் 99,668 அதிநவீன மருத்துவ உபகரணங்கள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது!

இன்றைக்கு உயர் வருவாய் இரக வகுப்பினர், மத்திய வருவாய் இரக வகுப்பினர் ஆகியோர் கடந்த காலங்களில் அரசு மருத்துவமனைக்கு வருவதில்லை. அரசு மருத்துவமனைக்கு ஏற்கெனவே உயர் இரக வருவாய்ப் பிரிவினர் மற்றும் மத்திய இரக வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் 20 சதவிகிதம் மட்டுமே அரசு மருத்துவமனைகளுக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது அது 40 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. 2 மடங்கு உயர்ந்திருக்கிறது. அதற்கு என்னக் காரணமென்றால், ஏற்கெனவே, ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் pay ward என்றுச் சொல்லக்கூடிய கட்டணப்படுக்கைத் தொகுதி ஒரே ஒரு இடத்திலிருந்தது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இன்றைக்கு கட்டணப்படுக்கைத் தொகுதி என்பது 22 இடங்களில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே பேசியவர்கள் பெருமதிப்பிற்குரிய அம்மன் K. அர்ச்சுணன் அவர்களைப் போன்றவர்களேல்லாம், பேசும்போது சொன்னார்கள், இதையெல்லாம் நாங்கள் கொண்டு வந்தோம் என்று அடுக்கிக்கொண்டே வந்தார் மகிழ்ச்சிதான். ஒன்றே ஒன்று சொல்லாமல் விட்டார். மருத்துவத் துறையையே உருவாக்கியது நாங்கள்தான் என்று சொல்லாமல் விட்டார், அதுவரை மகிழ்ச்சி. கடந்த கால ஆட்சியில், இதுவரை மருத்துவத் துறை உருவானதற்குப்பிறகு, அதிநவீன மருத்துவ உபகரணங்களென்று தமிழ்நாட்டின் மருத்துவமனைகளிலிருந்தது CT Scan என்பது மிக முக்கியமானக் கருவி. இப்பொழுது இருப்பது தமிழ்நாடு மருத்துவமனைகளில் 135 இடங்களில் இருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு 4 ஆண்டுகளில், 32 CT Scan-கள் பொருத்தப்பட்டிருக்கிறது. நான்கே ஆண்டுகளில் 32 CT Scan. MRI இப்பொழுது இருப்பது 44. 4 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது 28. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு 16 MRI இயந்திரங்கள் இன்றைக்கு வாங்கிப் பொருத்தப்பட்டிருக்கிறது. புற்றுநோயைத் துல்லியமாகக் கண்டறிகிறக் கருவி PET-CT Scan என்பது கடந்த அ.இ.அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் இரண்டே இரண்டு இடங்களில் மட்டுமே இருந்தது. ராஜீவ் காந்தியிலும், நம்முடைய மதுரை ராஜாஜியிலும். ஆனால், இன்றைக்கு தமிழ்நட்டின் முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலோடு நெல்லை, தஞ்சாவூர், சேலம், காஞ்சிபுரம் மற்றும் கோவை என்று 5 இடங்களில் புதிய PET-CT Scan-கள் பொருத்தப்பட்டு கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னால் 2 என்றிருந்த நிலை மாறி, இன்றைக்கு 7 இடங்களில் PET-CT Scan இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல், Linac கருவிகள் 2 இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. மரியாதைக்குரிய அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள் சொன்னார்கள் Cath Lab போன்ற கருவிகளெல்லாம், கடந்த காலங்களில் அமைக்கப்பட்டது என்றுச் சொன்னார். மருத்துவத் துறை உருவான நாளிலிருந்து Cath Lab என்பது 21 இடத்தில் மட்டுமே இருந்தது. இந்த அரசு அமைந்ததற்கு பிறகு கடந்த 4 ஆண்டுகளில் 8 இடங்களில் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, இப்பொழுது அது 29 இடங்களில் இருந்துகொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**குழந்தை பிறப்பு இறப்பு விகிதம்**

குழந்தை இறப்பு விகிதம் குறித்துச் சொன்னார்கள், குழந்தை மரண விகிதத்தைப் பொறுத்தவரை கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னால் 1,000 பிறப்புகளுக்கு 10.4 என்கின்ற விகிதத்திலிருந்தது அது தற்போது 10.4-லிருந்து 7.8 ஆகக் குறைந்திருக்கிறது. 10.4 என்பது 1,000 குழந்தைகள் பிறக்கும்போது 10.4 என்கின்ற அளவிலான அந்த இறப்பு 7.8 என்கின்ற அளவில் குறைந்திருப்பதற்கான காரணம் அந்த மகப்பேறு விகிதத்தில் இன்றைக்கு இந்த அரசு செய்திருக்கிற மகத்தான சாதனைகள். அதேபோல், மகப்பேறு இறப்பு விகிதம் 1 இலட்சம் தாய்மார்களுக்கு இந்த அரசுப் பொறுப்பேற்பதற்கு முன்னால், இறப்பு என்று இருந்தது 96.6. 1 இலட்சம் மகப்பேறு இறப்புகளில் 96.6. இப்பொழுது, அது 39 ஆகக் குறைந்திருக்கிறது. 3-ல் 2 பங்கு குறைந்து 1 பகுதியாக இன்றைக்கு இருந்துக்கொண்டிருக்கிறது. அதேபோல், இன்றைக்கு இறப்பு விகிதம் தொற்றா நோய்களினால் ஏற்படுகிற இறப்பு விகிதம் மிகப் பெரிய அளவில் பாதிக்கும் மேல் குறைந்திருக்கிறது. நாளோன்றுக்கும் தமிழ்நாட்டில், ஒரு 1,700 முதல் 1,800 பேர் வரை இறக்கிறார்கள். நோயின் பதிப்புகளால், விபத்துகளால் மற்றும் வயது முதிர்வால் 1,700 முதல் 1,800 பேரில் தொற்றா நோய்களினால் ஏற்படுகின்ற இறப்பும் கனிசமானது. தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால், மக்களைத் தேடி மருத்துவம் என்கின்ற மகத்தானத் திட்டத்தைக் கொண்டு வந்ததற்குப்பிறகு, தொற்றா நோய்களின் பாதிப்பு படிப்படியாய்க் குறைந்து. இன்றைக்கு இறப்பு எண்ணிக்கையும் சரிபாதிக்கும் மேல் சரிந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடுத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்பிறகு பேரிடர்கள், பெரிய அளவிலான புயல் பாதிப்புகள், மழைக்காலங்கள் ஒவ்வொரு மழைக்குப் பின்னாலும், மழைக்காலச் சிறப்பு மருத்துவ முகாம்கள் என்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நடத்தச் சொல்லி, கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் மகிழ்ச்சியோடு ஒரு செய்தியைப் பதிவிடுகிறேன். எவ்வளவு முகாம்கள் கடந்த 4 ஆண்டுகளில் நடத்தப்பட்டிருக்கிறது என்றால், மழைக் காலங்களில், பேரிடர் காலங்களில் மட்டும் 1,06,325 முகாம்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த 1,06,325 முகாம்களால் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை 56,08,431 பேர். இவர்கள், வெறும் மழைக் காலங்களில் மட்டுமே நடத்தப்பெற்ற மழைக்கால சிறப்பு முகாம்களால் பயன்பெற்றிருக்கிறார்கள்.

**காசநோய் இல்லா தமிழ்நாடு**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், காசநோய் இல்லா தமிழ்நாடு என்கின்ற இலக்கை அடைவதற்காக பிரத்யேகமான திட்டங்களை வகுத்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றின் வாயிலாக டிஜிட்டல் எக்ஸ்-ரே பொருத்தப்பட்ட 48 வாகனங்களின் சேவைகளைத் தொடங்கி வைத்தார்கள். அந்த டிஜிட்டல் எக்ஸ்-ரே பொருத்தப்பட்ட 48 வாகனங்கள் ஊர்கள்தோறும் சென்று காசநோய் பாதிப்புகளைக் கண்டறிந்து, சிகிச்சை அளிக்கும் பணியினை செய்து வருகிறது. அதேபோன்று, திருச்சி, சன்னாசிபட்டியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், தமிழ்நாட்டின்



முதலமைச்சர் அவர்கள், இந்த காசநோயைக் கண்டறிவதற்குரிய CBNAAT என்கின்ற ஓர் அதிநவீன கருவியின் செயல்பாட்டைத் தொடங்கி வைத்தார்கள். தற்போது 466 CBNAAT கருவிகள் பயன்பாட்டில் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், டிஜிட்டல் எக்ஸ்-ரே பொருத்தப்பட்ட 48 வாகனங்களும், CBNAAT என்கின்ற 466 அதிநவீன உபகரணங்களும் தமிழ்நாட்டில் பயன்பாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன என்ற மிக மகிழ்ச்சியான செய்தினை நான் தெரிவிக்கிறேன். இந்த காசநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கு புரதச் சத்துள்ள உணவுகளைத் தர வேண்டும் என்கின்ற வகையில், அதில் இன்றைக்கு தன்னார்வலர்களைப் பயன்படுத்துகிற ஒரு திட்டத்தை தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, அந்தத் தன்னார்வலர்களைப் பாராட்டி, அவர்களுக்கு பரிசும் அளித்தார்கள். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற காசநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு தாமாக முன்வந்து புரதச் சத்துள்ள உணவுகளைத் தரும் உதவியைச் செய்து கொண்டிருக்கும் தன்னார்வலர்களின் எண்ணிக்கை எத்தனை தெரியுமா? தமிழ்நாட்டின் வரலாற்றில் வேறு எப்போதும் இல்லாத அளவிற்கு 110 தன்னார்வலர்கள் காசநோய் இல்லா தமிழ்நாடு எனும் திட்டத்திற்கு இன்றைக்குப் பேருதவியாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

தற்போது தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, சுமார் 70 வீடுகள், 80 வீடுகள் கொண்ட 3,000-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் இருக்கின்றன. அந்த 3,000-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களில் பழங்குடியினர்கள் வசித்து வருகிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்கு இட்ட கட்டளை என்னவெனில், கடைகோடி மனிதனுக்கும் மருத்துவச் சேவை 100 சதவிகிதம் சென்றடைய வேண்டும் என்பதாகும். அந்த அடிப்படையில், இதுவரையில் நானே 300-க்கும் மேற்பட்ட வாகன வசதி இல்லாத கிராமங்களுக்கு நடந்தே சென்று, அந்த மக்களுக்கான மருத்து வசதிகளை வழங்கியிருக்கிறேன்; அந்த வசதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டும் வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**பணியிடங்கள்**

பெருமதிப்பிற்குரிய மன்ற உறுப்பினர் ஆ. கோவிந்தசாமி அவர்கள் இங்கே பேசிய போது, அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் எத்தனை பணியிடங்கள் நிரப்பப்பட்டன என்ற விவரத்தை புள்ளிவிவரங்களுடன் தெரிவித்தார்கள். நானும்கூட தெரிவிக்கிறேன்; MRB என்று சொல்லக்கூடிய Medical Services Recruitment Board என்கின்ற அமைப்பும், TNPSC என்கின்ற அமைப்பும், ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கின்ற District Health Society என்கின்ற அமைப்பும், National Health Mission என்கின்ற அமைப்பும் என இந்த நான்கு அமைப்புகளும் சேர்ந்து, கடந்த நான்கு ஆண்டுகளில் வெளிப்படைத்தன்மையோடு, எந்தவிதமான இடையூறும் இல்லாமல், எந்தவிதமான இடைத்தரகர்களும் இல்லாமல், எத்தனை பணியிடங்களை நிரப்பியிருக்கின்றன தெரியுமா? 25,295 பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. துறைவாரியாக நிரப்பப்பட்ட பணியிடங்கள் குறித்த விவரம் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. கடந்த நான்கு ஆண்டுகளில் 25,295 பணிடங்கள் நிரப்பப்பட்டு, ஒரு மகத்தான சாதனை படைக்கப்பட்டிருக்கிறது.

## 4 ஆண்டுகளில் மருத்துவத்துறையில் 25,295 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது!

உங்கள் அனைவருக்கும் தெரியும். இந்தியாவில் மொத்தமாக இருக்கிற பணியிடங்களில், கலந்தாய்வுகளின்மூலம் பணியிட மாறுதல் தற்போது துறைவாரியாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே கூறியவாறு, வெளிப்படைத்தன்மையோடு, இடைத்தரகர்கள் இடைஞ்சலின்றி, எந்தவிதமான தவறுகளுமின்றி, கலந்தாய்வுகளின்மூலம் இதுவரை பணியிட மாறுதல்கள் பெற்றிருப்பவர்களின் எண்ணிக்கை 42,718 பேர் என்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியினை பதிவிடுகிறேன். புதிய பணியிடங்களைப் பொறுத்தவரை 25,295; பணி மாறுதல்களைப் பொறுத்தவரை 42,718 பேர். இங்கே பெருமதிப்பிற்குரிய உறுப்பினர்கள் வேல்முருகன் போன்றவர்கள் MRB-ல் பணி நியமனம் செய்யப்பட்ட குறிப்பாக, கோவிட் காலத்தில் பணி நியமனம் செய்யப்பட்ட செவிலியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று தொடர்ந்து வேல்முருகன், பெருமதிப்பிற்குரிய ஜி.கே. மணி, செல்வபெருந்தகை போன்றவர்களெல்லாம் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டேயிருந்தார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், கொரோனா காலத்தில் எடுக்கப்பட்டது என்றாலும், இவர்கள் இடைகால பணி நியமனம் என்கின்ற வகையில் அப்போது அவர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்றாலும், சேர்ந்தது எப்படியாகயிருந்தாலும் சரி, அவர்களுடைய வாழ்வு பாதிக்கக் கூடாது; இவர்கள் அனைவருமே தமிழர்கள்தான். எனவே, அவர்கள் அத்துணை பேர்களுக்கும் நாம் வாழ்வளிக்க வேண்டுமென்கிற வகையில் இன்றைக்கு 3,184 பேரில் 2,160 பேருக்கு இந்த அரசு பணி நிரந்தரம் செய்திருக்கிறது. ரூ.18,000 சம்பளம் பெற்றுக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு ரூ.60,000-க்கு மேல் சம்பளம் பெற்று பணி நிரந்தரமாக்கப்பட்டிருக்கிற ஒரு மகத்தான சாதனை நடைபெற்றிருக்கிறது. இன்னமும்கூட 714 செவிலியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. காலிப் பணியிடங்கள் கண்டறியும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்னும் 10, 20 நாட்களில் இந்தக் காலிப் பணியிடங்கள் எவ்வளவு இருக்கிறது என்பது கண்டறியப்பட்டு, பணி நிரந்தரம் செய்யப்படும். மீதமிருக்கிற அதாவது இந்த 714 பேர்களும் இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இடைக் கால நியமனம் என்று வந்தவர்களும்கூட, இந்த அரசால், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தாயுள்ளதோடு நிரந்தரப்படுத்த ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே மருத்துவக் கட்டமைப்பு குறித்து பேசினார்கள். மருத்துவக் கட்டமைப்பு என்பது மிக மிக அவசியமான ஒன்று. ஏற்கெனவே தமிழ்நாட்டிலிருந்த மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் எண்ணிக்கை 19 மட்டும்தான். இன்றைக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கு 1,018 கோடியே 85 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்து, அதில் 19 மாவட்ட அரசு மருத்துவமனைகள். 6 மாவட்ட அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தவரை, மாவட்ட அரசு மருத்துவமனைக்கு இணையானது என்கின்ற வகையில் 25 மாவட்ட அரசு மருத்துவமனைகள் 1,018 கோடியே 85 இலட்சம் ரூபாய் செலவில் கட்டுமானப் பணிகள் முழுமைப்பெறும் தருவாயில் இருக்கிறது. மிக விரைவில் அதற்கு பணியாட்கள் நியமிக்கப்பட்டு, அந்த 25 மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளும், பேரவைத் தலைவரின் வள்ளியூர் உட்பட அனைத்தும் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**11 அரசு மருத்துவக்கல்லூரிகள்**

2022 ஜனவரி திங்கள் 12 ஆம் தேதி, தமிழ்நாட்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் திறந்து வைக்கப்பட்டன. தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் பிரதமர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இந்த 11 மருத்துவக் கல்லூரிகளிலும், இன்றைக்கு மருத்துவமனைகளை கட்ட வேண்டுமென்கின்ற வகையில், கடந்த 4 ஆண்டுகளாக 11 இடங்களிலும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளைக் கட்டி, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் கிருஷ்ணகிரி 700 படுக்கைகள், திருவள்ளூரில் 700 படுக்கைகள், கள்ளக்குறிச்சியில் 600 படுக்கைகள், இப்படி 11 மருத்துவமனைகளிலும் 500, 600, 700 என்கின்ற வகையில் படுக்கைகள் அமைத்து, கடைசியாக நீலகிரியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட அந்த மருத்துவமனையில் 700 படுக்கைகள் என்கின்ற வகையில் அந்த மருத்துவமனையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 6,500 புதிய படுக்கைகளுடனான 11 மருத்துவமனைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான் ஏற்கெனவே சொன்ன 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,286 ஆரம்ப சுகாதார நிலையங்களில், வாடகை கட்டடங்களில், வாடகை இல்லாத பழுதடைந்த கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கிற மருத்துவமனைகள் ஏறத்தாழ 4,000-க்கு மேல் இருந்தது. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், வினாக்கள்-விடைகள் நேரத்தின்போது அவர்கள் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற துணை சுகாதார நிலையங்களுக்கு, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு கட்டடங்கள் வேண்டுமென்ற கோரிக்கைகளை வைத்தார்கள். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் பரிசீலித்து, கனிவோடு ஏற்று, இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு கடந்த 4 ஆண்டுகளில் 1,894 புதிய கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. நேற்றைக்கு முன்தினம்கூட நானும் பொதுப் பணித்துறை அமைச்சரும் திருப்பத்தூர் மாவட்டத்தில் 22 கட்டடங்களைத் திறந்து வைத்திருக்கிறோம்.

இந்த 10 நாட்களில் மட்டும் நான் நான்கு, ஐந்து மாவட்டங்களுக்குச் சென்று 70-க்கும் மேற்பட்ட கட்டடங்களை திறந்து வைத்திருக்கிறேன். ஆக, இந்த நான்கு ஆண்டுகளில் 1,894 கட்டடங்கள் 3,453 கோடியே ஐந்து இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மருத்துவத் துறையின் வரலாற்றில் நான்கு ஆண்டுகளில் 3,400 கோடி மதிப்பீட்டில் 1,894 கட்டடங்கள் கட்டப்பட்டது என்பது, அதிகாரப்பூர்வமாகச் சொல்கிறேன், ஆணித்தரமாகச் சொல்கிறேன், அடித்துச் சொல்கிறேன், வேறு எந்த காலகட்டத்திலும் இவ்வளவு கட்டடங்கள் ஒரே நான்கு ஆண்டுகளில் கட்டப்பட்டது இல்லை (மேசையைத் தட்டும் ஒலி). இதோடுகூட நிறைவடைவதில்லை. இன்னமும் வாடகை கட்டடங்களில், வாடகை இல்லாத கட்டடங்களில், பழுதடைந்த கட்டடங்களில் இருக்கிற மருத்துவமனைகளின் எண்ணிக்கை 4,286. அந்த 4,286 மருத்துவமனைகளிலும் இன்னமும் கட்டடங்களை கட்டுவதற்குரிய அந்த நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகிறது.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு வகைகளிலான கோரிக்கைகளை துணை சுகாதார நிலையங்களை ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும், ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை வட்டார மருத்துவமனைகளாகவும், வட்டார மருத்துவமனைகளை மாவட்ட அரசு மருத்துவமனைகளாகவும், மாவட்ட அரசு மருத்துவமனைகளை பன்னோக்கு மருத்துவமனைகளாகவும், இன்றைக்கு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளாகவும் கட்டித் தர வேண்டுமென்கின்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கிறார்கள். அந்தந்தப் பகுதி மக்களின் மருத்துவத் தேவையறிந்து, மருத்துவச் சேவை வேண்டுமென்கின்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. அந்தவகையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எல்லோருடைய கோரிக்கையையும் ஏற்று, ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தச் செய்து ஏற்கெனவே 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மிக விரையில் பணியாட்கள் நியமிக்கப்பட்டு, இன்னும் ஒரு மாத காலத்தில் 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.

**708 நகர்ப்புறநலவாழ்வு மையங்கள்**

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் டில்லிக்கு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைமை அலுவலகம் அண்ணா அறிவாலயத்தை திறந்து வைக்கச் சென்றபோது, டில்லியிலே இருக்கிற Aam Aadmi Mohalla Clinics என்கின்ற ஒரு நகர்ப்புற நலவாழ்வு மையத்தை பார்த்து, அதனுடைய செயல்பாடு சிறப்பாக இருக்கிறது என்பதை கண்டறிந்து தமிழ்நாட்டிலும் அதுபோன்ற மருத்துவமனைகள் அமையவேண்டும் என்கின்ற வகையில் 21 மாநகராட்சிகள், 63 நகராட்சிகளில் 708 மருத்துவமனைகள் அமையும் என்று அறிவித்தார்கள். அறிவித்த ஒரே ஆண்டுகாலத்தில் 2023, ஜீன், திங்கள் 6 ஆம் தேதி 500 மருத்துவமனைகளை ஒரே நாளில் திறந்து வைத்தார்கள். மீதமிருக்கிற 208 மருத்துவமனைகளும் கட்டுமானப் பணிகள் முழுமையுற்றிருக்கிறது. District Health Society என்று சொல்லப்படுகிற அமைப்பின் சார்பில் மருத்துவர், செவிலியர், சுகாதார ஆய்வாளர், உதவியாளர் என்கின்ற நான்கு பணியிடங்கள் ஒவ்வொரு மருத்துவமனைக்கும், அதை நிரப்புவதற்குரிய தேர்வுகள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னும் 10 அல்லது 15 நாட்களுக்குள் அந்த 208 மருத்துவமனைகளும் தமிழ்நாட்டில் வரவிருக்கிறது. இப்படி மருத்துவ கட்டமைப்பு என்பது மிக சிறப்பாக இன்றைக்கு தொடர்ச்சியாக உயர்ந்து கொண்டிருக்கிறது.

**சிறப்பு திட்டங்கள்**

சிறப்புத் திட்டங்கள், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு கொண்டிருக்கிற சிறப்புத் திட்டங்கள் எனக்கு முன்னால் பேசிய அனைவருமே சொன்னார்கள். மக்களைத் தேடி மருத்துவம் 2021 ஆம் ஆண்டு, ஆகஸ்ட், திங்கள் 5 ஆம் தேதி தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களால் கிருஷ்ணகிரி, சாமனப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டது. கிருஷ்ணகிரி, சாமனப்பள்ளியில், சரோஜா அம்மாள் என்கின்ற ஒரு சகோதரியிடம் மருந்து பெட்டகத்தை தந்துவிட்டு, முதல்வர் அவர்கள் சொன்னார், முதல் பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை இன்றைக்கு தந்திருக்கிறேன். ஒரு கோடி பயனாளிகளை இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் சென்றடைய வேண்டுமென்று சொன்னார். முதல் பயனாளிக்கு மருந்து பெட்டகத்தை தந்த முதல்வர் 50 இலட்சமாவது பயனாளிக்கும் சித்தலப்பாக்கத்திற்கு வந்து மருந்து பெட்டகத்தை தந்தார். ஒரு கோடியாவது பயனாளிக்கு திருச்சி, சன்னாசிப்பட்டிக்கு வந்து மருந்து பெட்டகத்தை தந்தார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் ஈரோடு மாவட்டத்தில் இருக்கிற நஞ்சனாபுரம் என்கின்ற பகுதியில் இரண்டு

தொடர்ச்சி 8 – ஆம் பக்கம்